**In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Kilpennathur**
**DVC. 14/2025 Old DVC.No. 17/2024**
**Chief Examination of PW1**

**Name** : சுசீலா
**Father/Husband Name** : ஏழுமலை
**Village** :
**Taluk** :
**Calling** :
**Religion** :
**Age** : 39

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 10.09.2025**

நான் பெண்கள் குடும்ப வன்முறையில் இருந்து பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது சோமாசிபாடியில் வசிக்கிறேன். நான் எனக்கு ஏற்பட்ட குடும்ப வன்முறைகளை நிரூபணம் செய்வதற்காக இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லித்தான் எழுதப்பட்டுள்ளது. எனது தரப்பு ஆவணங்களாக நானும் எனது கணவரும் எடுத்துக்கொண்ட புகைப்படம் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.1** ஆகும். 12.01.2015ம் தேதியன்று எனது மகள் ஏ. ஷாலினி பிறந்தாள் அவளுடைய பிறப்புச்சான்றிதழை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.2** ஆகும். என்னுடைய ஆதார் அட்டையின் நகல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.3** ஆகும். 07.02.2023 தேதியில் மனுதாரர், எதிர்மனுதாரர் பெயரில் திருவண்ணாமலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ஏற்பு ரசீது தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.4** ஆகும். நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்காக மாவட்ட குடும்ப நல நீதிமன்றம் திருவண்ணாமலையில் மனுதாக்கல் செய்துள்ளேன். அந்த மனுவின் நகல் தாக்கல் செய்துள்ளேன். அது **ம.சா.ஆ.5** ஆகும். 22.07.2010ம் தேதியன்று எதிர்மனுதாரர் அவர் பெயரில்

கிரையம் பெற்ற பத்திரத்தின் சான்றிட்ட நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.6** ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்ய அவகாசாம் கோரியதன் பேரில் குறுக்குவிசாரணை தள்ளிவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-(M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்